**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 83/2018** **Date:09.03.2026.**

**(DW2)- எட்வின்ராஜ்**

<u>**வாதி** தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கூலி வேலை செய்கிறேன். என்ன படித்துள்ளேன் என்றால் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். கார்லோஸ் மகன் அந்தோணி முத்து எனது அப்பா என்றால் சரிதான். தற்போது எனது அப்பா உயிருடன் இல்லை என்றால் சரிதான். வாதி செய்துள்ள பிராதை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். எனது அப்பா அவரது காலத்தில் பெற்ற கடனை திரும்ப கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி எனது அம்மா என்றால் சரிதான்.

2. 2ம் பிரதிவாதி எனது அண்ணன் என்றாலும் மற்ற பிரதிவாதிகள் எனது சகோதரிகள் என்றாலும் சரிதான். வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அனுப்பிய அறிவிப்பை நான் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்புக்கு பதில் அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். சார்வே எண் 450/8 ல் உள்ள சொத்து எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான் . எனது அப்பா ஓட்டுநராக பணியாற்றியவர் என்றால் சரிதான். எனது அப்பா என்ன படித்துள்ளார் என்றால் நினைவில்லை, 8 வகுப்பு படித்திருப்பார் என்று நினைக்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள ஓட்டுநர் உரிமம் எண் எனது அப்பாவின் உடையது என்றால் சரிதான், தெரியாது என்று சாட்சி தன்னிச்சயாக கூறுகிறார்.

3. மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஓட்டுநர் உரிமம் எண் எனது அப்பாவின் உடையதுதான் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் 450/8 ற்கு பழைய சர்வே எண் 8710 குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்கை சரியானதுதானா என்றால் சரியானதுதான். எனது அண்ணன் பி.த.சா. 1 ஆக விசாரிக்கப்பட்டு மற்ற பிரதிவாதிகளான எனக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. நான் எனது எதிர்கோருரிமையில் குறிப்பிட்டுள்ள ஆள்மாறட்டம் மற்றும் மோசடி குறித்து காவல் நிலையத்தில் ஏதேனும் புகாரோ அல்லது ஏதேனும் வழக்கோ

அல்லது ஏதேனும் நடவடிக்கையோ எடுத்துள்ளேனா என்றால் எடுக்கவில்லை. பொதுவாக சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரு பத்திரம் பதிவு செய்யும் போது ஆவணங்களையும் தரப்பினர்களையும் பார்த்து விசாரணை செய்து முறையாக பதிவு செய்வார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் உரிமைப்பட்டட சொத்துக்களை அவரது வாரிசுகளாகிய நாங்கள் பிரித்து கொண்டோம் என்றால் பிரித்து கொண்டோம் ஆனால் இன்னும் பத்திரம் எழுதவில்லை.

5. எனது அப்பா உயிருடன் இருந்த காலத்தில் பெற்ற கடனை திரும்ப செலுத்துவதற்கு அவரது வாரிகளாகிய நாங்கள் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல, அவர் கடன் பெறவில்லை. எனது நிரூபணவாக்குமூலத்தில் வா.சா.ஆ.1 ஆவணத்தை உண்மையான ஆவணம் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி திட்டமிட்டு சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் எதன் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிட்டேன் என்றால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன்.

6. நான் பொய்யான சங்கதிகளை கூறி நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்கோருரிமையில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. எனது அப்பா அவர் பெற்ற கடனுக்கு ஈடாக வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் நாங்கள் கோரியுள்ள எதிர்கோருரிமை பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. எனது அப்பா உண்மையில் கடன் வாங்கியதால்தான் எனது அப்பா வா.சா.ஆ. 1 ஆவணத்தை பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

7. மேற்படி ஆவணம் மோசடி ஆவணம் என்றால் நான் முன்னரே நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் மேற்படி ஆவணம் குறித்து முன்னர் தெரியாது தற்போது தான் தெரியவந்தது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள தக்கது என்றாலும் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**